T-UN-282

உ

சிவமயம்.

ஆச்சாபுரம் என்கிற திருமணநல்லூர்

# ஸ்ரீசிவலோகத்தியாகராஜஸ்வாமி கோவில்

# வரலாறு.



தருமபுரம் ஆதீன வெளியீடு. 42.

1941.

உ

சிவமயம்.

ஆச்சாள்புரம் என்கிற திருமணநல்லூர்

# ஸ்ரீசிவலோகத் தியாகராஜஸ்வாமி கோவில் வரலாறு

---

இவ்வாலய பரம்பரைத்தர்மகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர
ஆதீனம்
24-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
ஷண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகளின்


ஆக்ஞைப்படி வெளியிட பெற்றது.

1941.

# பொருள் அடக்கம்.


பக்கம்


1. தலத்தின் பெயர். 2
2. மூர்த்தங்கள். 2
3. தீர்த்தம். 3
4. புராணம். 5
   (1) மாந்தாதா திருப்பணிசெய்து அருள்பெற்றது 5
   (2) காகமுனிவர் சிவலோக முற்றது. 6
   (3) கங்கை அருள்பெற்றது. 6
   (4) குமாரநாயகன் பூசை செய்தது. 7
5. திருஞான சம்பந்தப் பெருமான் முத்திபெற்றது. 7
6. புறக்கோயில்களும் ஆலய அமைப்பும். 9
7. இத்தலத்துக்குரிய தனிச்சிறப்புகள். 9
8. ஆலயத்தின் சொத்துக்கள் ஆபரணங்கள் முதலியன. 11
9. வருமானம். 11
10. நிர்வாகம். 11
11. தினப்பூசையும் திருவிழாக்களும். 12
12. பாடல்கள். 13
13. தனிநூல். 16



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

உச-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்



ஆச்சாள்புரம் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மன் ஆலயம்.

உ

திருச்சிற்றம்பலம்.



# ஆச்சாபுரம் என்கிற திருமணநல்லூர்
## ஸ்ரீ சிவலோகத்தியாகராஜஸ்வாமி கோவில்
## வரலாறு.

---

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு பரமபதியாகிய சிவபெருமான் எழுந்தருளியிருந்து அருள்புரியும் பல தலங்களையுடைய சோழவளநாட்டில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாய் கொள்ளிட நதிக்குத் தென்புறமாய் கொள்ளிடம் புகை ரத நிலையத்திலிருந்து கிழக்கே மூன்று கல் தூரத்திலுள்ளது. இத்தலமானது சிதம்பரத்திற்குத் தென்கிழக்காயும், திருமுல்லைவாயிலுக்கு வடமேற்காயும், மயேந்திரப்பள்ளிக்கு தென்மேற்காயும், சீகாழிக்கு வடகிழக்காயும் அமைந்திருக்கிறது. இது திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் ஒன்றாகும்.

## தலப்பெயர்.

சிவலோகம், நல்லூர், திருமணவை, முத்திபுரம் என பல பெயர்கள் இத்தலத்துக்கு உண்டு.

**சிவலோகம்:-** வசிட்டர் முதலிய முனிவர்கட்கு சிவலோகம் காட்டியருளியமையால் இத்தலத்திற்கு இப்பெயர் வந்தது.

**நல்லூர்:-** ஆதியில் பிரமதேவன் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு சீகாழிக்குப் போகுங்கால் இத்தலத்தில் உள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம், முதலியவற்றின் சிறப்புக்களையும் செழிப்பான பலவளங்களையும் கண்டு இஃது ஓர் நல்லூர் ஆம் என்றமையால் இப்பெயர் வந்தது.

**மணவை-முத்திபுரம்:-** சைவசமய முதற் குரவராகிய திருஞானசம்பந்தப்பெருமான் தமது திருமணத்தின்போது தம் மனைவியரோடும் அடியார்களோடும் பரிசனங்கள் புடை சூழ எழுந்தருளி இறைவனருளால் தோன்றிய சோதியிற் கலந்து முத்தி எய்தினமையின், மணவை, முத்திபுரம் என்னும் பெயர்களும் வழங்கலாயிற்று.

---

## மூர்த்தங்கள்.

விநாயகர்:- வழித்துணைவிநாயகர்.
இறைவன்:- சிவலோகத்தியாகர்.
அம்மை:- திருவெண்ணீற்றுமை.

பொய்ந்நெறி நீங்கி மெய்ந்நெறியாய முத்திவழி செல்வோர்க்கு துணையாயிருப்பதால் இத்தல விநாயகர் "வழித்துணைவிநாயகர்" என்னும் திருநாமம் பெற்றிருக்கிறது.

வசிட்டர், விசுவாமித்திரர், துருவாசர், முதலிய நாற்பத்தெண்ணாயிரவரும் சிவலோகத்தை தங்களுக்குக் காட்டியருளல் வேண்டுமெனத் தவஞ் செய்தனர். அதற்கிணங்க சிவபெருமான் இங்கு சிவலோகத்தை அம்முனிவர்களுக்கு காட்டியருளினமையின் "சிவலோகத்தியாகர்" என திருநாமம் பெற்று விளங்குகிறார்.

திருஞானசம்பந்தப்பெருமான் மணமகளோடும் அடியார்களோடும் சோதி ஆலயத்துப் புக்கபோது மணமக்களிருவர்க்கும் மற்றவர்க்கும் திருவெண்ணீறு அளித்தமையால் 'திருவெண்ணீற்றுமை' என்ற பெயர் அம்மையார்க்கு வழங்கி வருகிறது.

---

## தீர்த்தம்.

**பஞ்சாக்கர தீர்த்தம்:-** இது ஆலயத்திற்கு எதிரில் உள்ளது. சிவபெருமான் வேதாகமங்கள் முதலிய யாவற்றினும் எடுத்தோதப்படும் உண்மை மந்திரமாகிய தாரகத்தை தீர்த்தமாகவும் நிறுவவேண்டுமெனத் திருவுளங்கொண்டு கரத்துச் சூலத்தை பூமியிற் பாய்ச்சி இத்தீர்த்தத்தை உண்டாக்கி இதற்கு "பஞ்சாக்கர தீர்த்தம்" என்ற நாமமிட்டமையால் அப்பெயர் வழங்கலாயிற்று. இதில் ஒருபோது மூழ்கினும் எல்லாப் பாபங்களும் நீங்கி சித்தி முத்திகளைப் பெறுவர்; அன்றியும் ஒருகாலும் நரகஞ் சாரார் என்பதற்கும்

இத் தீர்த்தத்தின் பெருமை அளவிடற்பாலதன்று என்பதற்குக் கீழ்வரும் வரலாறே சான்ருகும்.

முன்னொருகால் வடதிசையிலுள்ள ஓர் வேதியன் தன் குலதருமங்கள் எல்லாம் விட்டவனுய் இழி குல மாதரையும் முறையிலாரையும் காம மிகுதியாற்புணர்ந்தும் குடி, கொலை, சூது முதலியவைகளும் உடையோனுய் உழன்ருன். அவன் யாது காரணத்தாலோ இத்தீர்த்தத்தில் ஒருகால் முழுகினுன். அவன் இறந்ததும் அவனுயிரை நரகத்தில் இட எமபடர்கள் கொண்டு செல்லும்போது சிவகணங்கள் அதைத் தடுத்து மீட்டு சிவலோகத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தன.

இதுவன்றி இத்தலத்தில் எட்டுத் தீர்த்தங்களுமுண்டு.

| | | |
|---|---|---|
| 1. | கீழ்த்திசையில் | "பிருகு தீர்த்தம்" |
| 2. | தென்கிழக்கில் | "அசுவ தீர்த்தம்" |
| 3. | தெற்கில் | "வசிஷ்ட தீர்த்தம்" |
| 4. | தென்மேற்கில் | "அத்திரி தீர்த்தம்" |
| 5. | மேற்கில் | "வியாச தீர்த்தம்" |
| 6. | வடமேற்கில் | "மிருகண்டு தீர்த்தம்" |
| 7. | வடக்கில் | "அகத்திய தீர்த்தம்" |
| 8. | வடகிழக்கில் | "சமதக்கினி தீர்த்தம்" |

இந்தத் தீர்த்தங்களில் முழுகினேர்கள் இம்மையில் விரும்பியவற்றைப் பெறுவதோடு அம்மையிலும் முத்தி யின்பத்தையும் பெறுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

## புராணம்.

வியாத முனிவர் சூத முனிவர்க்கருளிய புராணம் பதினெட்டனுள் பிரமாண்ட புராணத்து க்ஷேத்திர காண்டத்தில் கூறப்பட்டதை நைமிசாரண்ய வாசிகளுக்கு சூதமா முனிவர் எடுத்தோதியதைத் தமிழில் பன்னிரண்டு சருக்கமாய்ப் பிரித்து இத்தலபுராணம் ஐநூற்றறுபத்தாறு செய்யுட்களில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் அவர்களால் இயற்றப்பட்டிருக்கிறது.

---

## 1. மாந்தாதா திருப்பணி செய்து அருள்பெற்றது.

முன்னாளில் அயோத்திமா நகரத்தை ஆண்டு வந்த மாந்தாதா என்னும் சூரிய குல அரசன் தன் குலகுருவாகிய வசிட்ட முனிவரால் இத்தலப் பெருமையைக் கூறக்கேட்டு மந்திரிகளோடும் நால்வகை சேனைகளோடும் இங்கு வந்து வழிபட்டுக்கொண்டு தங்கியிருப்ப ஓர்நாள் இறைவனருளால் "இத்தலத்தில் அன்போடும் பணிவோர்க்கு நினைத்த யாவும் கைகூடும்" என ஓர் வாக்கு அசரீரியாக எழுந்தது. அதைக்கேட்ட வேந்தன் வியந்து ஆனந்த பரவசனாய் "எம்பிரான் அருளிருந்த வாறென்னே" என்று துதித்து பெரும்பொருள்கொண்டு ஆலயம் புதிக்கி மண்டபம் மதில் முதலிய யாவையும் அழகுற அமைத்து பஞ்சாக்கர தீர்த்தத்திற்குப் படித்துறையும், மேற்புறத்தில் பூஜை மண்டபம் ஜப மண்டபம் முதலியவைகளும் கட்டுவித்து திருவிழாக்களும் நடத்தி அருள்பெற்று மீண்டும் அயோத்தியடைந்து பன்னாள் அரசு புரிந்து சிவலோக மெய்தினன்.

---

## 2. காகமுநிவர் சிவலோகமுற்றது.

இம்முனிவர் காசியில் சிவபெருமானை நோக்கிப் பல காலம் தவஞ்செய்து இறைவன் காட்சியருள "அடியே னுக்கு சிவலோகவாழ்வு தந்தருள வேண்டு"மென விண் ணப்பித்துக் கொண்டதற்கிணங்கி "நீ சோழவள நாட்டில் உள்ள நல்லூரைச் சேர்வாயாக" என்று அருள்செய்தபடி நல்லூருக்கு வந்து பூஜை முதலிய வழிபாடுசெய்து கொண் டிருந்து திருஞான சம்பந்தப் பெருமான் திருமணத்தின் போது சிவலோக வாழ்வெய்தினர்.

## 3, கங்கை அருள்பெற்றது.

கங்கையானவள் நெடுங்காலம் தவஞ்செய்யச் சிவ பெருமான் காட்சிதந்து யாது வரம் வேண்டுமென "யானும் காகமுனிவரன் கண்டு வணங்கிய நல்லூரின் கண்ணுள்ள இறைவனை வணங்க விரும்புகின்றேன்" என்ன அவ்வாறே இறைவன் அருள் புரிந்தார். அவ்வண்ணமே நல்லூரினுள்ள ஓர் தடாகத்து வந்தெழுந்து சிவலோகத்தியாகரை வழிபட்டு வேண்டும் வரம்பெற்று மீண்டும் தன்னிடம் சார்ந்தாள்.

## 4. குமார நாயகன் பூஜை செய்தது.

கயிலையங்கிரியில் ஓர் நாள் முருகப்பெருமான் சிவபெருமானை வணங்கி "யான் தேவரீர் திருவடிப் பூசனையாற்ற சிறந்த தலம் ஒன்று அருளல் வேண்டும்" என விண்ணப்பித்தார். பெருமான் "நாம் எப்போதும் விரும்பியிருக்கும் தலமாவது நல்லூர்" என்றருளிச் செய்தார். அதன்படி முருகப் பெருமான் இத்தலத்துப் பூசித்துப் பல வரங்களும் பெற்றார்.

அகத்தியர் வசிட்டர் முதலிய அனேக முனிவர்களும் இத்தலத்திறைவனை பூஜை செய்து நல் வரங்களைப்பெற்றிருக்கிறார்கள்.

---

## திருஞானசம்பந்தப்பெருமான் முத்திபெற்றது.

உலகம் உய்யவும் சமண்வலி அழியவும் சைவந்தழைக்கவும் பன்னிரு திருநாமங்களையுடைய சீகாழிப்பதியில் கவுணியர் கோத்திரத்தில் சிவபாத இருதயரும் பகவதி அம்மையாரும் செய்த தவப்பேற்றால் அவதரித்து மூன்றாம் பிராயத்திலேயே அம்மையப்பரால் மெய்ஞ்ஞானத்தோடு சிவஞானமும் அளிக்கப்பெற்ற ஆளுடைய பிள்ளையாரென்னும் திருஞான சம்பந்தப்பெருமான் இறைவனது அருள் வழியே அடியார்களோடு சிவதலங்கள் தோறும் சென்று அமுதளாவிய தண்டமிழ் மொழியால் பாசுரங்கள் பாடி பொற்றாளம் சிவிகை, முத்துவிதானம், பொற்கிழி, படிக்காசு முதலியன இறைவனால் தரப்பெற்று விடத்தால் இறந்த வணி

களை உயிர்ப்பித்தல், மறைக்கதவினை அடைத்தல், பாண்டி நாடு சென்று சமணர்களை வாதில் வென்று திருநீற்றொளி தழையச்செய்தல்,மட்பாண்டத்துள்ள என்பைப் பூம்பாவையாய் உயிர்ப்பித்தல் முதலிய எண்ணிறந்த அற்புதங்களை நிகழ்த்தி மீண்டும் சீகாழி வந்தடைந்தனர். தாய் தந்தை சுற்றம் முதலியோர்களது வேண்டுகோளுக்கிணங்க பதினாறுவது பிராயத்தில் நல்லூரின்கண் நம்பாண்டார் நம்பிகளது திருமகளாகிய தோத்திரபூரணியை மணஞ்செய்ய அடியார்கள் முதலிய அனைவரும் புடைசூழ சிவிகை ஊர்ந்து இத்தலத்திற்கு வந்தருளினர். வேதியர் நம்பாண்டார் கிரகத்து வே த வி தி ப் ப டி மணச்சடங்கியற்றினார்கள். அக்கினியை மணமகளோடும் வலம்வரும்போது திருவருளால் இவ்வக்கினியாவது நம்மிறைவன் திருவுருவே என்ற எண்ணம் வர இவ்வுலகியல் வாழ்க்கை தொடர்ந்ததே என்று நினைந்து வருந்தி "இல்லாளோடும் நின்பாதமலர் சேரும் பருவம் ஈதென்று" விண்ணப்பித்து சிவலோகத் தியாகரது ஆலயத்தை நோக்கி மணமகளோடும் மணத்தின் வந்த அனைவரோடும் எழுந்தருள அவ்வமயத்து அரனார் உருவேயாய் விளங்கு மெய்ஞ்ஞான ஒளியாய் விண்ணுற நிமிர்ந்து நின்று வாசலும் வகுத்துக்காட்ட அவ்வழியே மணத்து வந்திருந்த முருகர், நீலநக்கர், பெரும்பாணர் முதலிய அளவிறந்த அடியார்களை புகுவித்து தாமும் தம் காதலியைக் கைப்பற்றி "காதலாகிக் கசிந்து" என்னும் திருப்பதிகத்தை ஓதி சோதியுட் புகுந்து கலந்து மீளா நெறியாகிய பதமலரின் நிழல் சேர்ந்தார்.

## புறக்கோவில்களும் ஆலய அமைப்பும்.

ஆலயத்திற்கு வெளியே தென்மேற்கிலும் வடமேற்கிலும் இரண்டு பிள்ளையார் கோவில்கள் இருக்கின்றன.

ஆலயத்திற்குக் கிழக்கோபுரம் ஒன்றிருக்கிறது. மூலத்தானத்திற்கு வடபுறம் சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளன. அதில் மேற்குக் கடைசியில் இருக்கும் இலிங்கம் பாதாளவீசர் என்று புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அம்மையார் சன்னிதி தனியே முதற் பிரகாரத்தில் வடமேற்குப் பக்கத்தில் கிழக்கு முகமாய் அமைந்திருக்கிறது. முன்புறம் நூற்றுக்கால் மண்டபம் ஒன்றிருக்கிறது. அதில் தெற்கு முகமாய்த் திருஞான சம்பந்தப்பெருமானைத் தோத்திரபூரணியாகிய மணமகளோடும் பிரதிட்டைசெய்து வைக்கப்பட்டிருக்கிறது. உட்பிரகாரத்தில் தென்பக்கத்தில் அடியார்களாகிய அறுபான் மூவரும் பிரதிட்டை செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றைய எல்லாப் பரிவாரங்களும் முறைப்படி அமையப் பெற்றுள்ளன.

---

## இத்தலத்துக்குரிய தனிச்சிறப்புகள்.

ஆரூர்ப்பெருமானை வீதிவிடங்கப் பெருமான் என வழங்குவதேபோல் இப்பெருமானைச் சிவலோகத்தியாகப் பெருமான் என வழங்கப்பெறுவதனாலேயே இத்தலத்து மூர்த்தியின் பெருமை நன்கறியப்படுகிறது. அன்றியும் பிற தலங்களில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவருக்கு முத்தி

யளித்ததாகச் சொல்லப்படுகிறதே யல்லாமல் ஒருசேரப் பேதமின்றித் திருஞானசம்பந்தப்பெருமான் திருமணத்து வந்த அடியார்களே யல்லாமல் பூப்பெய்திய மகளிரும்கூட சிவலோக வாழ்வெய்தும்படி அருள்புரிந்த தலம் இதுவன்றி வேறெங்கும் இல்லை. அன்றியும் அருட்சோதிக்கு ஒளியும் தண்மையும் உண்டென அறியாது அக்கினியாம் என்று அஞ்சி ஓடிய அபக்குவரையும் நந்தியம்பெருமானால் மறித்து வரச்செய்து சோதியுட் புகுவித்து அருள் புரிந்ததாகவும் கூறப்படுகிறது. அதற்காதாரமாக நந்தி வெருட்டி, நந்தியடு என்ற பெயருடைய இடமும் மடுவுமிருக்கின்றன.

இத்தலத்திலன்றி பக்கங்களிலிருந்து பலரும் இச்சோதியிற் கலந்தனர் என்பதற்கு சான்றுகள் பல இருக்கின்றன. அதில் ஒன்று கடைக்கண்விநாயகநல்லூர் (கடைக்காநல்லூர்) அங்குள்ள விநாயகர் அங்குள்ளோரை நல்லூர் சோதியுட் கலக்கும்படி கடைக்கண்ணால் கடாட்சித் தருளினமையில் அவருக்குக் கடைக்கண்விநாயகர் என்றும், அவர் எழுந்தருளியிருக்கும் ஊருக்கு கடைக்கண்விநாயக நல்லூர் எனவும் பெயர் வழங்கலாயிற்றெனவும் கூறப்படுகிறது.

இத்தலத்திற்கு அருகில் சைவசமயாசாரியர் நால்வரின் பெயராலும் திருஞானசம்பந்தபுரம், திருநாவுக்கரசநல்லூர், ஆலாலசுந்தரம், மாணிக்கவாசல் என்று நான்கு கிராமங்களமைந்திருக்கின்றன.

அன்றியும் "காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது" என்ற தொடக்கமுள்ள

பெரும்பொருள் விளக்கி அன்பைப் பெருக்கும் நமச்சி வாயப் பதிகத்தைத் திருஞானசம்பந்தப் பெருமான் இறுதியாயோதிய பெருஞ் சிறப்பினையுடையதும் இத் தலமே யாதலால் இத்தலத்துப் பெருமானை முறைப்படி திரிகரண சுத்தியாய் அன்பிற்றோய்ந்து நின்று வழிபடுவார்க்கு பெருமை யாவும் விளங்குமென்பதற் கையமில்லை.

---

## ஆலயத்தின் சொத்துக்கள் ஆபரணங்கள் முதலியன.

இவ்வாலயத்திற்குப் பாய்ச்சல் நஞ்சையில் சுமார் 170 (நூற்றெழுபது) ஏக்கரும், புஞ்சையில் சுமார் 70 (எழுபது) ஏக்கரும் நிலம் உண்டு. சுமார் (ரூ. 1800) ஆயிரத்தெண்ணூறு ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்களுமிருக்கின்றன.

---

## வருமானம்.

ஸ்தாவர சொத்திலிருந்து வருஷம் ஒன்றுக்கு சுமார் (ரூ. 3500) மூவாயிரத்து ஐநூறும் சர்க்கார் மோகினி (570–8–0) ஐநூற்று எழுபது ரூபாய் எட்டணவும் வருமானமாக வருகிறது.

---

## நிர்வாகம்.

இத்தேவஸ்தானம் தொன்று தொட்டு திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமாய் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானத்தின் பரிபாலனத்தில் இருந்து வருகிறது.

---

## தினப்பூசையும் திருவிழாக்களும்.

காலைசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாங் காலம், அர்த்தசாமம் ஆகிய ஐந்து காலபூசை நடைபெறு கின்றன.

வைகாசி மாதம் சுக்கில பக்ஷ மூன்றும் நாள் திருவா திரையில் கொடியேற்றுவிழாச் செய்து முறையே பத்து நாட்களும் விழா நடக்கும். இதில் எட்டாம் நாள் இரவில் ஸ்ரீசிவலோகத்தியாகருக்கும் ஸ்ரீதிருவெண்ணீற்றுமைக்கும் திருமணம் நடக்கும்.

பிரமோத்ஸவம் முடிந்த மூன்றும் நாள் வைகாசி மூலத்தன்று பூரணாம்பிகையோடு திருஞான சம்பந்தப் பெருமான் தேவார தோத்திரத்துடன் திருமணமும் முத்தி யெய்திய காட்சியும் நடைபெறுகின்றன.

இங்கு காரண காமிக ஆகம முறைப்படி பூசைகள் விழாக்கள் முதலியன நடைபெறுகின்றன.

இதற்குத் திருஞான சம்பந்தப் பெருமானல் பாடப் பெற்ற இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன.

# தேவாரம்.

பண் அந்தாளி குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்,

1. கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமண மேய நம்பானே.

## கடைக்காப்பு.

2. நறும்பொழிற் காழியுள் ஞானசம்பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத்தானை
உறுந்தமிழாற் சொன்ன வொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவ மவல மிலரே.

திருச்சிற்றம்பலம்.

சோதியுள் யாவரோடும் சென்றபோது ஓதிய நமச்சி வாயப் பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

1. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

### கடைக்காப்பு.

2. நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல்லா ரெலாம்
பந்தபாச மறுக்க வல்லார் களே.

திருச்சிற்றம்பலம்.

---

## தலபுராணச் செய்யுட்கள்.

### சிவலோகத் தியாகர் துதி.

1. நீர்கொண்ட நெடுஞ்சடைமே லிளமதிதண்
ணிலவெறிப்ப நிலவுசெம்பொன்
வார்கொண்ட துணைப்புளக முலைத்திருவெண்
ணீற்றுமையாள் வாமத்தோங்கக்
கூர்கொண்ட படைத்திகிரி மான்முதல்வா
னவர்போற்றக் கோதிலாத
சீர்கொண்ட மணவைவளர் சிவலோகத்
தியாகர்பதம் சென்னிசேர்ப்பாம்.

### திருவெண்ணீற்றுமை துதி.

2. ஆரணியைப் பெருங்கருணை வடிவானை
யுலகங்க ளனைத்துமீன்ற
காரணியைச் சிற்பரையை வெற்பரையன்
புதல்விதனைக் கடுக்கையென்னும்

தாரணியை யானனத்தர் சிவலோகத்
தியாகரிடந் தன்னில்வாழும்
பூரணியை யெழிற்றிருவெண் ணீற்றுமையை
யெப்போதும் போற்றி வாழ்வாம்.

---

## திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்.

1 கொழுதும் வரிவண் டுழுதுழக்கிக் கொழுந்தே
னிரம்ப வாய் மடுத்துக்
குமட்டிக் கவிழ்ந்தாங் கெதிரெடுக்குங்
குளிர் மென்மலர்ப்பூங் குழற்கொம்பே
தொழுது மழுதும் புகழ்பாடித் துதித்து
முருகி யுருகி நிகழ்
தொண்டருளக் கோயிலுக்கமைத்த தூண்டா
விளக்கே சுயஞ் சோதி
யெழுது முயிரோவியக் கொழுந்தே யெழுதா
வுருவத்திளங் கொடியே
யெழு பேருலகு நினைந்து தொழு தெழுகோமளமே
யிலவாதி
முழுதுமிணையி னின்கனிவாய் முத்தந்
தருக முத்தமே
முதுசீர்மணவைப் பெருமாட்டிமுத்தந்
தருக முத்தமே.

2 வையமுழுதுய்யவொரு வாவியங்கரைநின்று
வாய்மலர்ந்தழுத பிள்ளை
மதுரமிகு செவ்வாய்க் கருங்குழற்காதலியை
மாமணம் செய்த ஞான்று
செய்ய மலர் மீதனந் துஞ்சு பஞ்சாக் கரத்
தீர்த்தக் கரைக்கணின்று
சேர்ந்தார் களங்கமுற் றொழிய வெண்ணீறு
தன் செங்கரத் தாலளித்தா
ளுய்யவிவள்வாவென் றுரைத் தபடியேவிரைந்
தொருவனீ வந்துசேரி,
னுன்களங்கந்தவிர வெண்ணீறு நல்காள்கொ
லோவிதனை யுணராததெ
னையமனமோவித் திருப்பெரு மணத்துமையோ
டம்புலீ யாடவாவே
யலகில்புவனங்கண்முற்றீன்றதாய்காணி
வளோடம் புலீ யாடவாவே.

## தனி நூல்கள்.

1. ஆச்சாள்புரம் ஸ்தல புராணம்.
2. திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்.

Printed at the Vasantha Press, Mayavaram.



உ

நால்வர் துதி.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரான் அடிபோற்றி
வாழிமலி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூர்திருத் தாள்போற்றி.